**கரைச்சிப் பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 18 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கரைச்சிப் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டுக்கான நிலையான வைப்பு வட்டி ரூபா 10,132,127 ஏனைய வருமானமாக நிதிக்கூற்றுகளில் காட்டப்படாது திரண்டநிதியாக காட்டப்பட்டுள்ளமையால் வருமானம் நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாத வகையில் கணக்கு முறைமைகள் பின்பற்றப்படும் | நிலையான வைப்பு வட்டி வருமானமாக நிதிக்கூற்றுகளில் காட்டப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 950,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரப்பெட்டிகள் சொத்தாக | இவ்வாண்டில் சொத்தாக காட்டப்படும் | சொத்தாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுகளில் காட்டப்படாமையினால் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | |
| (iii) | மீளாய்வாண்டில் பெறவேண்டிய திண்மக்கழிவுக் கட்டண நிலுவை மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பு நிலைய கட்டணம் நிலுவைகள் ரூபா 1,597,500 வருமானமாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்காமையால் வருமானமும் வருமதியும் குறைத்துக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | இதுவரை காலமும் நிலுவையாக காட்டப்படவில்லை. இனிவரும் காலங்களில் நிலுவையாக காட்டப்படும். | நிலுவை வருமானங்கள் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட வேண்டும் |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன்கள் ரூபா 2,274,789 மீதியினை உறுதிப்படுத்துவதற்குரிய உறுதிப்படுத்தல்கள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்காமையினால் செலுத்தவேண்டிய கடன் தொகையினை சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது. | இக்கடன்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஆவணங்கள் எதுவும் தற்போது சபையிடம் இல்லை. நிலுவையினை செலுத்துமாறு நிதியத்தினால் இதுவரை கோரப்படவும் இல்லை | கணக்காய்வுக்குச் சான்றுகள் உரிய காலத்தினுள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள்<br>பெறுமதி<br>ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | |
| | (i) 128 (ச) | 19,130 | வாகனத்திற்குரிய உத்தரவுப்பத்திரம் வருடாவருடம் புதுப்பிக்கப்படல் வேண்டும் புதுப்பித்தல் காலதாமதத்திற்கு தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக உரிம மாற்றம் செய்யப்படாமல் காணப்பட்ட வாகனங்களுக்கு உரிம மாற்றம் செய்யப்பட்ட போது மேலதிக கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| | (ii) 571 | 790,311 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 12 எண்ணிக்கையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | வேலைகள் நிவர்த்தி செய்யாதவிடத்து குறைபாடுகளை பிடிபண வைப்பிலிருந்து சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஆ) | 1989 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் அத்தியாயம் (VIII) பிரிவு 169 - 173 | 1,400,000 | வேலை பற்றிய விரிவான அளவைக் காட்டும் மதிப்பீட்டு அளவுத்திட்டம் தயாரிக்கப்படாது தொங்குபாலம் அமைத்தல் வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | தற்போது பூரணப்படுத்தப்பட்டு உரிய முறையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளது | வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப்பத்திரிைக 1989 ஏப்ரல் 17 திகதிய அத்தியாயம் VII பிரிவு 16 இல் 165 இன் படி | - | அரசிறை, செலவீனம், முற்பணங்கள், வைப்புக்கள், கடன்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் தொடர்புடைய கணக்குகளை குறித்து சபையால் பிரதான பேரேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பிரதான பேரேடு தற்போது பேணப்பட்டு வருகின்றது | வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 2012 ஜனவரி 5 ஆம் திகதிய அரசநிதி சுற்றறிக்கை 01/2012 இன் 3.2 மற்றும் உள்@ராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இலக்கம் 02/2015(1) | 45,649,565 | சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு வேலைகளை கையளிக்கும் போது சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆய்வு உத்தியோகத்தர், சபை செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது சபையின் தவிசாளரினால் சனசமூக நிலையங்களுக்கு மூலதன வேலைகள் வழங்கப்பட்டுள்ளது. | அங்கீகாரம் தனியான படிவத்தில் பெறப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தில் செயலாளர் ஒப்பமிட்டுள்ளது | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (உ) | அரசநிதி சுற்றறிக்கையின் 01/2012 இன் 3.4 | 14,042,903 | அதிகார எல்லைக்குள் காணப்படும் சனசமூக நிலையங்களுக்கு 20 எண்ணிக்கையான மூலதன வேலைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை | ஒரு வட்டாரத்தில் சனசமூக நிலையம் இயங்கும் நிலையில் இல்லாது இருந்தமையால் வேறு வட்டாரத்தில் உள்ள சனசமூகநிலையம் தெரிவு செய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஊ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 | 14,103,676 | வருமதியான வாடகை மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான எழுத்தாணை சபையின் செயலாளரினால் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 31 மே 2020 வரை ரூபா 7,141,355 பெறப்பட்டுள்ளது. மிகுதி அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வடமாகாண சபை மாகாண நிதிவிதி - 2008 இல் 163.3(ii) | 1,107,088 | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முற்பணங்கள் உரிய காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஏ) | 1983 இன் 24 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் உபகார நிதிக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு | - | சபையின் 04 உத்தியோகத்தர்களுக்கு விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய திட்ட இலக்கங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | 03 உத்தியோகத்தர்களுக்கு 45 வயதிற்கு மேலாகும். 01 உத்தியோகத்தர் தேசிய அடையாள அட்டை பிரதி சமர்ப்பிக்கவில்லை | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,583,351 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,734,689 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,000,000 | 11,375,718 | - | 1,000,000 | - | - |
| (ii) | வாடகைகள் | 44,716,532 | 47,070,703 | 5,130,991 | 31,960,000 | 38,669,757 | 5,932,692 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 17,651,360 | 9,120,787 | - | 5,362,000 | 7,230,545 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 30,944,423 | 24,919,932 | 8,972,685 | 28,482,600 | 58,770,789 | 42,193,973 |
| | | 98,312,315 | 92,487,140 | 14,103,676 | 66,804,600 | 104,671,091 | 48,126,665 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையின் வருமானங்களை பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபையின் எல்லைக்குள் இயன்றளவு வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் தாபன விபரங்கள் பட்டியல் இடப்படுவதுடன் 100 வீதம் வரவுசெலவுத்திட்டத்தில் அறவீடுகள் உள்ளடக்கப்படவில்லை. அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் | வருமானங்களை பட்டியல்படுத்தி சேகரிக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மோட்டார் கிரேடர் மற்றும் உருளைகளின் பயன்பாட்டின் வருமான நிலுவைகள் ரூபா 1,468,672 கடந்த 2 ஆண்டுகளாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | நிலுவை வருமானங்களை அறவிட உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் மாட்டிறைச்சிக்கடையினை மீள்கோரல் மேற்கொள்ளாது பகிரங்க ஏலத்தில் விடப்பட்டமையால் ரூபா 2,855,000 நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது. | வரவு அறிக்கையில் ஒப்பமிடப்பட்டிருக்கவில்லை. கேள்விதாரரிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெறவில்லை. | நிதியிழப்பு ஏற்படாதவாறு செயற்படல் வேண்டும் |

### 2.2.3 வாடகை மற்றும் குத்தகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகை மற்றும் குத்தகைகளின் நிலுவை ரூபா 3,812,717 ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்குத்தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,003,770 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 3,697,633 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைக்கட்டணங்கள் ரூபா 1,828,472 நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,697,633 பெறப்பட்டுள்ளன | உரிய காலத்தில் நிலுவைகளை அறவிடப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உபவிதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 33 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் எதுவித உபவிதிகளும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை | உபவிதிகள் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 33 முக்கிய விடயங்களும் மாகாண பிரதம அமைச்சின் 1952/16 இலக்க 2016 பெப்ரவரி 22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு பிரதேச சபைகளில் ஏற்று நடைமுறைப் படுத்தப்படுகின்றன | சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் உருவாக்கப்படல் வேண்டும் |

**(ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 4,185,135 பெறுமதியான 09 வேலைத்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட விளைவினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாடுகள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன. | குறித்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஒப்பந்ததாரரால் எதுவித முன்னாயத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் அவ் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | பாதீட்டின் பிரகாரம் வேலைத்திட்டங்கள் உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் |

**(இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 2,923,000 பெறுமதியான 05 வேலைத்திட்டங்கள் ஒப்பந்தகாலம் முடிவடைந்தும் நாளது வரை வேலை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நடைமுறைகள் மற்றும் விதிகளைப் பின்பற்றியே இறுதிக் கொடுப்பனவு வழங்கப்படும் | ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ii) | சபையின் நிதிக்கூற்றுகளில் சில்லறைக்கடனாளிகளாக செலுத்தப்பட வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்ட ரூபா 2,040,000 பெறுமதியான 03 எண்ணிக்கையான வேலைத்திட்டங்கள் ஒப்பந்தகாலம் முடிவடைந்தும் 2020 மே 28 ஆம் திகதி வரை வேலை ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த நடைமுறைகளுக்கு அமைவாக எதிர்வரும் காலங்களில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வேலைகள் வழங்கப்படும் | ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலைத்திட்டங்கள் உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையின் எல்லைக்குட்பட்ட கழிவுகளை வீடுகள், கடைகள், கோட்டல்கள், மரக்கறி மற்றும் பழவிற்பனை நிலையங்கள், இறைச்சிக்கடைகள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், பொதுஇடங்கள் ஆகியவற்றில் இருந்து | 2021 ஆம் ஆண்டிலிருந்து திண்மக்கழிவு முகாமைத்துவ முறைமைகள் பின்பற்றப்படவுள்ளன | திண்மக்கழிவு வகைப்படுத்தல் முறைமை பின்பற்றப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்படுகின்ற கழிவுகள் இடத்தின் தன்மைக்கேற்றவாறு திண்மக்கழிவு வகைப்படுத்தல் முறைமை பின்பற்றப் பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | சபையினால் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் எவையும் வழங்கப்பட்டிருக்காததுடன் 20 சுகாதார தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மேற்கொள்ளவேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இனிவருங்காலங்களில் மருத்துவப்பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | கழிவு முகாமைத்துவ பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வருடாந்தம் மருத்துவப்பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (iii) | நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் மண்தட்டு இடப்பட்டு மூடப்படாமையினால் கொசுக்கள், நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக அமைந்திருப்பதுடன் சூழல் துர்நாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. | நீர்தேங்கும் சதுப்பு நிலம் என்பதால் மண்பரவுவதற்கு இயலாமல் உள்ளது. | சூழல் பாதிப்படையாமல் செயற்படல் வேண்டும் |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கழிவுகளை பிரிக்கக்கூடிய வெவ்வேறு பொதிமுறைமை நடைமுறைப்படுத்தப்படாது சேகரிக்கப்படும் கழிவுகள் எரியூட்டப்படுவதனால் சூழல் பாதிப்படைகின்றது. | கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு உக்காதவை விற்பனைக்கும் உக்குபவை மீள்சுழற்சிக்கும் பயன்படுத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | சூழல் பாதிப்படையாமல் கழிவுகள் அகற்றப்படல் வேண்டும் |
| (ii) | திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த | மருந்து எண்ணைகள் தேவைக்கு ஏற்ப மட்டும் விசிறப்படுவதுண்டு. | சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | | எடுக்கப்படல் வேண்டும் |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நீண்டகால அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலத் திட்டங்கள் எவையும் தற்சமயம் தயாரிக்கப்படவில்லை. | நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 12 மூலதன வேலைத்திட்டங்களுக்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் காலதாமத நாட்களுக்கு காலதாமத தண்ட அறவீடு ரூபா 1,420,409 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை | காலதாமததண்ட தொகை வைப்பிலிடப்பட்டது. உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் காலதாமத தண்ட அறவீடு அறவிடப்படல் வேண்டும் |
| (ஆ) சபைக்கு சொந்தமான 152 கடைகளுக்கான மாதாந்த வாடகையானது விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்படாது சபையின் தீர்மானத்தில் மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | இனிவருங்காலங்களில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் | விலைமதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படல் வேண்டும் |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 2019 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 119 ஆகவும் உள்ளவாறான ஆளணியினர் எண்ணிக்கை 98 ஆகவும் இருந்ததுடன் 21 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை | இவ் ஆளணி வெற்றிடங்களுள் 06 வெற்றிடங்கள் முடிவுறுத்தப்படும். ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தினுள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) ஒழுக்காற்று நடவடிக்கைகள்** | | |
| சபையின் 03 உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதுடன் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஒரு உத்தியோகத்தர் நிதி மோசடி காரணமாக விசாரணை நிறைவடைந்து குற்றப்பத்திரம் வழங்கப் பட்டுள்ளதுடன் மற்றைய உத்தியோகத்தரின் விசாரணை அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| **(இ) ஊழியர் கடன்கள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய, நீக்கப்பட்ட மற்றும் ஒய்வு பெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 14,250 விழா முற்பணம் மற்றும் 06 உத்தியோகத்தரிடமிருந்து இடர்கடன் நிலுவை ரூபா | உத்தியோகத்தர்களிடமிருந்து ஊழியர்கடன்கள் அறவிடப்பட்டு வருகின்றன | உரிய காலத்தினுள் நிலுவைகளை அறவிடப்படல் வேண்டும் |

322,369 1 தொடக்கம் 9 வருடங்களாக அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் உள்ள 40 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சபையின் உரிமம் அற்ற மற்றும் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனங்களுக்கு பெறுமதி மதிப்பிடுவது சிரமமாக காணப்படுகின்றது. | பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும் |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 18 வாகனங்களுக்கு வாகன வருமான உத்தரவுப்பத்திர திகதி காலாவதியாகியிருந்ததுடன் 12 வாகனங்களுக்கு வாகன வருமான உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 13 வாகனங்களுக்கு காப்புறுதி பத்திரம் காலாவதியாகியிருந்ததுடன் 06 வாகனங்களுக்கு காப்புறுதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 14 வாகனங்களுக்கு காப்புறுதி பத்திரம் பெறப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்கள் உரிம மாற்றம் செய்யப்படாமையினால் காப்புறுதி பத்திரம் பெறுவது சிரமம். | வாகன வருமான உத்தரவுப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன பெறப்படல் வேண்டும். |

### 3.4.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ள தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் 07 வாகனங்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. இவற்றை பயன்படுத்தக்கூடிய நிலையில் மாற்றுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசிய சேவை வாகனங்கள் தவிர்ந்த வாகனங்களிற்கு திருத்தச் செலவுகளை மேற்கொள்வதில்லை. | வாகனங்களை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.4.4 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் 02 பூங்காக்கள் மற்றும் கூட்டுப்பசளையாக்கல் கட்டட பெறுமதி ரூபா 11,238,788 ஆனது 2 வருடங்களுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுகின்றது | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதன் ஊடாக வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.5 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி 2.14.1 இன் பிரகாரம் வேலைத்திட்டத்திற்கு கூறுவிலைகள் கோரப்படாததுடன், உடன்படிக்கையும் செய்யப்படாமல் ரூபா 1,400,000 பெறுமதியான தொங்குபாலம் அமைத்தல் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொங்குபாலம் அமைத்தலுடன் தொடர்புடைய விற்பன்னர்கள் கிளிநொச்சி மண்ணில் இருந்தமையால் பெறுகை நடைமுறை ஒன்றின் தேவை எழ வாய்ப்பு இன்றி போனது | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |